சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 12.03.2026
வா.சா.1 – செல்லக்கண்ணு @ செல்லக்கண்ணன் @ கண்ணன் S/o
சின்னசாமி
O.S. No.371/2022
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

நான் சென்ற முறை சாட்சி விசாரணைக்கு வரும் போது, பாகவிஸ்தி பத்திரத்தை எடுத்து வருவதாக கூறினேன். ஆனால் அதை தற்போது நான் எடுத்து வரவில்லை. தேடி பார்க்கவேண்டும். ஏற்கனவே அனைத்து சொத்துக்களுக்கும் பாகம் ஏற்பட்டுள்ளதாக 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படும் போது ஒத்துக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு பாகபிரிவினைக்கு பின்னிட்டு பொதுவில் உள்ள சொத்துக்கள் என்று குறிப்பிட்டுள்ளது வா.சா.ஆ.15ல் கண்டுள்ள 14 இலக்க சொத்துக்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.15ல் 14 இலக்க சொத்துக்களை தவிர மீதமுள்ள சொத்துக்களும் B அட்டவணை சொத்துக்களும் அந்தந்த கிரையதாரர்கள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். எதிர்கோரிக்கை வழக்கில் உள்ள C அட்டவணை 3 இலக்க சொத்துக்களை பொறுத்த ஆவணங்கள் தான் தற்போது என்னிடம் காட்டப்படும் 26.11.2014 தேதியிட்ட 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரம் மற்றும் 01.12.2004 தேதியிட்ட என் பெயரில் உள்ள கிரைய பத்திரம் மற்றும் 12.08.2011 தேதியிட்ட 2ம் பிரதிவாதியின் மனைவி ஸ்ரீதேவி அவர்கள் பெயரில் உள்ள கிரைய பத்திரம் காட்டப்பட்டு சாட்சி சரிதான் என்று ஒப்புகொள்ளவே மேற்படி 3 ஆவணங்களும் பி.சா.ஆ.1 முதல் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஏற்கனவே சொத்துக்கள் பாகம் ஏற்பட்டுவிட்டது, ஆனால் பதிவு செய்யப்படவில்லை. மேற்படி விபரங்களை நான் வழக்கிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லியிருந்தேனா என்றால்

சொல்லியிருக்கிறேன். ஏற்கனவே பாகம் ஏற்பட்டுவிட்ட நிலையில் நான் தற்போது தாக்கல் செய்திருக்கும் பாகபிரிவினை வழக்கானது தவறானது என்றால் சரியல்ல. கூட்டுப்பட்டாவில் இருக்கும் சொத்துக்களை பொறுத்து கிரையமாக பதிந்துள்ளார்கள் பட்டாவும் அவர்கள் பெயரில் வந்துவிட்டது. என்னுடைய பாகத்தில் வந்த சொத்தை அய்யங்காளை மகள் செல்வி, போதும்பொண்ணு, மற்றும் பஞ்சு ஆகியோர் மூவரும் சேர்ந்து சுப்பையா என்ற நபருக்கு எழுதி கொடுத்துவிட்டார்கள். மேற்படி பாகம் ஏற்பட்டதாக சொல்வதில் எந்தெந்த சொத்துக்கள் என் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்று நான் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். சர்வே எண்.531/1ல் 42-1/2 செண்டை மேற்படி நபர்கள் அவர்களுடைய அப்பாவிற்கு சொந்தம் என்று பதிந்துவிட்டார்கள். இந்த வழக்கில் A மற்றும் B அட்டவணை சொத்துக்களை பொறுத்து ஏற்கனவே பாகம் ஆகிவிட்டநிலையில் மீண்டும் பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. எனது வழக்கறிஞர் அவ்வாறு தாக்கல் செய்துவிட்டார். ஏற்கனவே எங்களுடைய கட்சிப்படி வழக்கு A மற்றும் B அட்டவணை சொத்துக்களை பொறுத்து பாகம் பிரிக்கப்படாத நிலையில் அதிலிருந்து கிடைக்கப்பட்ட வருமானத்தை கொண்டு வாங்கப்பட்ட எதிர்கோருரிமை பரிகாரத்தில் கண்டுள்ள C அட்டவணை சொத்து, அதற்குரிய ஆவணங்களான பி.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களில் அனைத்து பாகஸ்தர்களுக்கும் 1/6 பாகம் உள்ளது என்றால் இல்லை. எதிர்கோரிக்கை வழக்கில் கண்டுள்ள C அட்டவணை சொத்தை பொறுத்து எதிர்கோரிக்கை தாக்கல் செய்யாததாலும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் அதை பொறுத்து நான் எதுவும் சொல்லாததாலும் C அட்டவணை சொத்தை பொறுத்து எதிர்கோரிக்கைதாரர்களுக்கு 1/6 பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. கூட்டு அனுபவத்தில் நான் இல்லாத போது, கூட்டு அனுபவத்தில் இருப்பதாக கூறி வழக்குக்குரிய தொகையை சரிவர

செலுத்தாததால் என் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. எனது பாகம்கோரிய வழக்கு தள்ளுபடிக்குரியது என்றும் எதிர்கோரிக்கை பரிகாரம் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பளிக்கக்கூடியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.03.12 10:18:45 +0530

Sub Judge

Melur